# திருக்கைலாய ஞான உலா என்னும் இலக்கியத்தில் விரவியுள்ள உலா பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்கள்

**து. தீபா அர்ச்சனா, ந. சுபராஜ்**

மொழித் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் - ஒலுவில்

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களை பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்று வகைப்படுத்தலாம். ஒரு தலைவனின் முழு வாழ்க்கை வரலாற்றையும் கூறுவது பேரிலக்கியமாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, கம்பராமாயணம் போன்ற இலக்கியங்கள் பேரிலக்கிய வகையினுள் அடங்கும். தலைவனின் வாழ்க்கையில் ஒரு பகுதியை மட்டும் கூறுவது சிற்றிலக்கியமாகும். உதயகுமாரகாவியம், நாககுமாரகாவியம், யசோதரகாவியம், சூளாமணி, நீலகேசி என்பன சிற்றிலக்கிய வகையினுள் அடங்கும். அந்தவகையில் குறவஞ்சி, பரணி, தூது, பள்ளு, உலா, அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், காவடிசிந்து என தமிழில் தொண்ணூற்றி ஆறு வகையான சிற்றிலக்கியங்கள் உண்டு. இறைவனோ அல்லது அரசனோ யானை, தேர், குதிரை போன்றவற்றில் ஏறி இசைக் கருவிகளை இசைப்போர் முன்னேவர மக்கள் புடைசூழ நகர வீதிகளில் வலம் வருவதை ‘உலா’ என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகின்றது. உலா வருபவர்களை கண்டு மகளிர் காதல் கொள்வதை கருப்பொருளாகக் கொண்டு பாடப்படுவதே உலா இலக்கியமாகும். அந்த வகையில் திருக்கைலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் உலா சிறப்பை பாடும் இலக்கியமே ‘ஆசுகவி’ என போற்றப்படும் சேரமான்பெருமாளால் இயற்றப்பட்ட திருக்கைலாய ஞான உலாவாகும். இவ்வுலா இலக்கியம் சிவபெருமானின் முழுமுதற் தன்மையை விளக்கியுள்ள விதம் சிறப்புமிக்கதாகும். கைலையில் அரங்கேற்றப்பட்ட இவ்விலக்கியம் அங்குள்ள மாசாத்தனார் வாயிலாக திருப்பிடவூருக்கு வந்து தமிழ் நாட்டில் உலவுவதாகிற்று. ‘ஆதியுலா’ எனப் போற்றப்படும் இவ்விலக்கியத்தில் உலா பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்கள் திறம்பட வெளிப்படுகின்றன. அந்தவகையில், இவ்விலக்கியத்தில் விரவியுள்ள உலா பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்களை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். திருமுறைகளில் சேரமான் பெருமாளின் பிரபந்தங்களின் மூலங்களே ஆய்வின் எல்லையாகக் கொள்ளப்படுகின்றன. சேரமான்பெருமாளின் பிரபந்தங்களின் மூலங்கள் இவ்வாய்வின் முதன்னிலைத் தரவுகளாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சேரமான்பெருமாளின் பிரபந்தம் தொடர்பாக வெளிவந்த நூல்களும், உலா இலக்கியம் தொடர்பான நூல்களும், இவ்வாய்வுடன் தொடர்புடைய ஏனைய ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள செய்திகள், பிற ஆக்கங்கள் இவ்வாய்வின் துணைத்தரவுகளாக அமைகின்றன. இறுதியாக இவ்வாய்வானது, முன் மாதிரிகள் எதனையும் பின்பற்றாத போதிலும் உலா பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்கள் திருக்கைலாய ஞான உலாவில் சிறப்பான முறையில் விரவியுள்ளது என்பதை முடிவாக உரைக்கின்றது.

***பிரதான சொற்பதங்கள்::*** *உலா இலக்கியம், சிவபெருமான், சேரமான்பெருமாள், திருக்கைலாயஞானஉலா*

## அறிமுகம்

தன்னிகரில்லா ஒரு தலைவனின் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட்களுள் ஏதேனும் ஒன்றினைத் தருவது சிற்றிலக்கியமாகும். சிற்றிலக்கிய வகையினுள் உலா, கலம்பகம், பள்ளு, பிள்ளைத்தமிழ் போன்றன அடங்கும். சிற்றிலக்கியங்களை வடமொழியில் ‘பிரபந்தங்கள்’ என அழைப்பர். தமிழில் தொன்னுற்றியாறு வகையான சிற்றிலக்கியங்கள் உண்டு.

> ‘‘பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
> தொண்ணூற் றாறு என்னும் தொகையது ஆம்’’

என கி.பி 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல் என்ற பாட்டியல் தொண்ணூற்றி ஆறு வகையான சிற்றிலக்கியங்கள் உண்டு எனக் கூறுகின்றது.

''ஊரோடு தோற்றமும் உரிதென மொழிப வழக்கொடு
சிவணிய வகைமை யான'' (தொல்காப்பியம்: பொருளதிகாரம் 83)

என்ற தொல்காப்பிய நூற்பா அடிப்படையில் தோன்றிய இலக்கியம் உலா இலக்கியமாகும். மன்னர்கள், கடவுளர்கள், சான்றோர்கள், குழந்தைப் பருவம் உடைய தலைமகன் அல்லது இளமைப்பருவம் உடைய தலைமகன் ஆகியோருள் ஒருவர் யானை, தேர், குதிரை போன்றவற்றில் ஏறி இசைக்கருவிகளை இசைப்போர் முன்னேவர மக்கள் புடைசூழ நகர வீதிகளில் வலம்வர, அவர்களைக் கண்டு மகளிர் காதல் கொள்வதை கருப்பொருளாகக் கொண்டு பாடப்படுவதே உலா இலக்கியமாகும். உலா இலக்கியத்தை பவணி, வெண்பாற் கைக்கிளை என்றும் கூறுவர். தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும், நாயன்மார் பாடல்களிலும் உலா பற்றிய கருத்தாக்கங்கள் காணப்பட்டாலும் உலா ஒரு தனி இலக்கிய வகையாக உருவானது பிற்காலத்திலேயே ஆகும். பிற்காலத்து பாட்டியல் நூல்கள் உலா இலக்கியத்திற்கான இலக்கணத்தை கூறுகின்றன. அதாவது ''பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவத்துப் பெண்களும் உலா வரும் தலைவனைக் கண்டு, அவன் மீது காதல் கொண்டு வருந்தும் நிலையை கலிவெண்பாவினால் கூறுவது உலா இலக்கியமாகும்'' என இலக்கணம் கூறப்படுகின்றது.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய சேரமான் பெருமாளால் பாடப்பட்ட இலக்கியமே திருக்கைலாய ஞான உலாவாகும். இவர் கைலைக்குச் செல்லும் வழியில் இவ்வுலாவை மிக விரைவாகப் பாடியருளினார். இவரிற்கு முன்னர் யாரும் உலா பாடியிருப்பதாக தெரியவில்லை. இதனால் இவரே முதன்முதலாக உலாநூல் பாடியவராக சான்றோர்களால் கொள்ளப்படுகின்றார். இவ்வுலா இலக்கியம் முதன் முதலாக எழுந்தது என்னும் காரணத்தால் 'ஆதியுலா' என்றும் கூறப்படுகின்றது. அத்துடன் 'தெய்வீக உலா' என்றும் இவ்விலக்கியத்தை அழைப்பர். இதில் 197 கண்ணிகள் உள்ளன. இறுதியில் ஒரு வெண்பாவும் உள்ளது. சேரமான்பெருமாள் திருக்கைலையில் சிவபெருமான் திருமுன் அடைந்து, தாம் உலாப் பாடியிருப்பதாகவும் அதனை கேட்டருள வேண்டும் என்றும் விண்ணப்பித்தார். இறைவனும் கூறுமாறு கட்டளையிட சிவபெருமான் முன்னே இவ்வுலா அரங்கேற்றம் செய்யப்பட்டது. திருமுறையில் இவ்விலக்கியம் 11ஆம் திருமுறையாக உள்ளது. சிவபெருமானை தலைவனாகவும், அவரது அருளை விரும்பிய மண்ணுயிர்களை அத்தலைவன்பாற் காதல்கொண்டு மயங்கிய பெண்ணாகவும் வைத்து இவ்விலக்கியம் பாடப்பட்டுள்ளது.

## ஆய்வு பிரச்சினை

சேரமான் பெருமாளின் திருக்கைலாய ஞான உலாவிற்கு முன்பு எவ்வித உலாப்பிரபந்தங்களும் தமிழில் எழுந்திருக்கவில்லை. இருப்பினும் உலாப்பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்களையும் எங்ஙனம் அவ்விலக்கியம் கொண்டிருக்க முடியும்? என்பது ஆய்வுப் பிரச்சினையாகும்.

## ஆய்வின் நோக்கம்

தமிழில் எழுந்த முதல் உலா இலக்கியம் திருக்கைலாய ஞான உலாவாகும். ஆயினும் இவ்விலக்கியம் உலாப்பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்களை

கொண்டுள்ளது. அந்தவகையில் இவ்விலக்கியத்தில் விரவியுள்ள உலா பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்களை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறைகள்**

திருமுறைகளில் சேரமான் பெருமாளின் பிரபந்தங்களின் மூலங்களே ஆய்வின் எல்லையாகக் கொள்ளப்படுகின்றன. சேரமான்பெருமாளின் பிரபந்தங்களின் மூலங்கள் இவ்வாய்வின் முதன்னிலைத் தரவுகளாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சேரமான்பெருமாளின் பிரபந்தம் தொடர்பாக வெளிவந்த நூல்களும், உலா இலக்கியம் தொடர்பான நூல்களும், இவ்வாய்வுடன் தொடர்புடைய ஏனைய ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள செய்திகள், பிறஆக்கங்களும் இவ்வாய்வின் துணைத்தரவுகளாக அமைகின்றன.

**திருக்கைலாய ஞான உலாவில் விரவியுள்ள உலா பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்கள்**

**01. உலாச் செய்யுள்களின் அமைப்பு**

உலாச் செய்யுள்கள் கண்ணிகளால் அமைந்தவை. கண்ணி என்பது இரண்டு கண் போல் இணைந்த இரண்டு வரிகளால் அமைந்தவை எனப் பொருள்படும். மேலும் பாடப்படும் பாடலில் கண்ணி இரண்டிரண்டு அடிகள் எதுகையால் தொடுக்கப்பட்டிருக்கும். அந்தவகையில் திருக்கைலாய ஞான உலாச் செய்யுள்கள் கண்ணிகளால் அமைந்தவையாகும். இவ்விலக்கியத்தில் 197 கண்ணிகள் உண்டு.

''திருமாலும் நான்முகனும் தேர்ந்துனரா(து) அன்றங்(கு)
அருமால் உறஅழவாய் நின்று - பெருமான்'' (1ஆவது கண்ணி)

**02. உலா இலக்கியத்தின் பாவகை**

உலா இலக்கியத்தின் பாவகை கலி வெண்பாவாகும். அந்தவகையில் திருக்கைலாய ஞான உலா கலிவெண்பாவால் பாடப்பட்ட ஓர் இலக்கியமாகும்.

**03. உலா இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவனின் உலாச் சிறப்புக்கள் கூறப்படும்**

உலா இலக்கியமானது பாட்டுடைத் தலைவன் உலா வருவதை சிறப்பித்துக் கூறும். அதில் பாட்டுடைத் தலைவனாக இறைவன் அல்லது அரசன் இடம்பெறலாம். அந்தவகையில் திருக்கைலாய ஞான உலாவில் சிவபெருமான் பாட்டுடைத்தலைவராக உள்ளார். இதில் சிவபெருமான் உலா வருதல் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. திருக்கைலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் தேவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க, இசைக்கருவிகள் இசைப்போர் முன்னேவர, மக்கள் புடைசூழ நகரவீதிகளில் வலம் வருகின்றார் என சேரமான்பெருமாள் கூறுகின்றார்.

''பூமாண் கருங்குழலார் உள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் வரும் போழ்திற்'' (58ஆவது கண்ணி)

இப்பாடலடியில் மணம் வீசும் மலர் சூடிய கூந்தலையுடைய மாதர்களின் மனம் புதிய இன்பத்தை அனுபவித்தற் பொருட்டு, அழகிய

சிவபெருமான் விடையின் மேல் அமர்ந்தப்படி உலா வருகின்றார் எனக் கூறப்படுகின்றது.

**04. உலா இலக்கியத்தில் தலைவனின் சிறப்புக்கள் கூறப்படும்**

உலா இலக்கியத்தில் பாட்டுடைத்தலைவனின் குடிப்பெருமை, ஆட்சிமுறை, நீதிமரபு, அழகு, கொடைத்தன்மை என்பன இடம்பெரும். அந்தவகையில் திருக்கைலாய ஞான உலாவில் சிவனது சிறப்புக்களை அவதானிக்கலாம். சிவன் முத்தொழிலை ஆற்றுகின்ற தன்மை, அடியவர்களிற்கு அருள் பாலிக்கின்றமை, பக்தர்களை காத்தல் போன்ற பல சிறப்புக்கள் கூறப்படுகின்றது.

''அரியாகிக் காப்பான் அயனாய் படைப்பான்
அரனாய் அழிப்பவனும் தானே'' (5ஆவது கண்ணி)
''ஆய விழுப்பூர் அர்ச்சுனன் ஆற்றுக்குப்
பாசுபதம் ஈந்த பதம் போற்றி'' (54ஆவது கண்ணி)

இது போன்ற பாடல் வரிகளில் சிவனின் சிறப்புக்களை அறியலாம். பிரம்மாவாக படைத்தல் தொழிலையும், விஷ்ணுவாக காத்தல் தொழிலையும், உருத்திரனாக அழித்தல் தொழிலையும் ஆற்றுகின்றார் என சிவன் முத்தொழில் புரியும் தன்மையும், அர்ச்சுனனிற்கு பாசுபதம் அளித்த தன்மையும் விளக்கப்படுகின்றது.

**05. உலா இலக்கியத்தில் தலைவன் உலாவிற்கு செல்ல ஆயத்தமாதல் கூறப்படும்**

உலா இலக்கியங்களில் தலைவன் உலா செல்வதற்கு நீராடுதல், அழகிய ஆடை ஆபரணங்கள் அணிதல் பற்றிக் கூறப்படும். அந்தவகையில் திருக்கைலாய ஞான உலாவில் சிவபெருமான் உலா செல்ல ஆயத்தமான முறை பின்வருமாரு அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

''வயந்தன் தொடுத்தமைத்த வாசிகை சூட்டி''
''குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தம் கொண்டு''
''மணிமகர குண்டலங்கள் காதுக்(கு) அணிந்தாங்(கு)
ஆணிவயிரக் கண்டிகை பொன்னாண்-பணிபெரிய'' (14-19 வரையான கண்ணிகள்)

மாலை அணிந்து, மேணியில் சந்தனம் பூசி, பட்டாடை உடுத்தி, மகுடம் சூடி, நெற்றிப்பட்டம், குண்டலங்கள், முத்துமாலை, வீரசங்கிலி, வீரக்கழல் அணிந்து உலாச் செல்ல ஆயத்தமானார் எனக் கூறப்படுகின்றது.

**06. உலா இலக்கியத்தில் தலைவன் உலா வரும் தோற்றம் கூறப்படும்**

உலா இலக்கியங்களில் தலைவன் வீதியில் உலா வரும் தோற்றம் கூறப்படும். அந்தவகையில் திருக்கைலாய ஞான உலாவில் சிவன் உலா வரும் தோற்றம் பற்றி கூறப்பட்டுள்ளது. அஸ்வினி தேவர்கள் வாய் நிறைந்த மந்திரங்களால் வாழ்த்துச்சொல்ல, உருத்திர கணத்தவர் துதி மொழிகளைக் கூற, குபேரன் மேன்மையும் தகுதியும் உடைய சிறந்த பொருட்களை வரும்வழியில் வாரிவாரி இறைக்க, கங்கை யமுனை உள்ளிட்ட நதிகளின் அதிதெய்வங்கள் அளவிலாத வெண்சாமரங்களை இருபுறமும் வீச அதன் நடுவே சிவபெருமான் உலா வருகின்றார் என சிவனது உலாக்கோலம் சிறப்பிக்கப்படுகின்றது.

''விண்ணோர் பணிய உயர்ந்த விளங்கொளிசேர்
வெண்ணார் மழவிடைய மேல்கொண்டாங்கு எண்ணார்'' (34ஆவது கண்ணி)

**07. உலா இலக்கியத்தில் தலைவன் உலா வரும் போது, மக்களின் நிலைகள் கூறப்படும்**

தலைவன் உலா வரும் போது அதை பார்த்த மக்கள் பரவசம் அடைதலும், தலைவனின் அழகில் மயங்கிய பெண்களின் மனநிலைகளும் கூறப்படும். அந்தவகையில் திருக்கைலாய ஞான உலா என்னும் இலக்கியத்தில் பேதை பருவம் முதலாய் பேரிளம்பெண் பருவம் வரையுள்ள மாதர்கள் மகிழ்ச்சியுடன் கூட்டம் கூட்டமாக நின்று சிவபெருமானின் உலாக்காட்சியை கண்டு களித்தனர் எனக் கூறப்படுகின்றது.

''பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக
மாதரவர் சேர மகிழ்ந்தீண்டிச்'' (97ஆவது கண்ணி)

இங்கு கூறப்படும் ஏழு வகைப் பருவப்பெண்களாக பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**08. உலா இலக்கியங்களில் தலைவன் உலா வரும் ஊர்திகள் பற்றிக் கூறப்படும்**

உலா இலக்கியங்களில் தலைவன் உலா வரும் ஊர்திகள் பற்றிக் கூறப்படும். அந்தவகையில் திருக்கைலாய ஞான உலாவில் சிவபெருமான் உலா வந்த விடை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இளமையான இடபம், சினம் மிகு மதர்த்த விடை, சிறந்த மதர்த்த விடை, சிகரங்களையுடைய வெள்ளிமலையின் மேல் எழுந்தருளியிருந்த பரிதி போன்ற தூய்மையுள்ள மதர்ந்த விடை, கெடுதல் இல்லாத மதர்ந்த விடை என்றெல்லாம் சிவபெருமான் உலா வந்த விடை பற்றி கூறப்பட்டுள்ளது.

''மழவிடையை மேல்கொண்டாங்(கு)'' (34ஆவது கண்ணி)
''காய்ச்சின மால்விடை மேட்'' (84ஆவது கண்ணி)
''வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஔிளிய மால்விடையை மேல்கொண்டு'' (107ஆவது கண்ணி)

இவ்வாறான முறைகளில் திருக்கைலாய ஞான உலாவில் உலா பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்கள் விரவியுள்ளவாற்றை அவதானிக்கலாம்.

**முடிவு**

உலா வருபவர்களை கண்டு மகளிர் காதல் கொள்வதை கருப்பொருளாகக் கொண்டு பாடப்படுவதே உலா இலக்கியமாக இருப்பது வழமை ஆனால் திருக்ககைலாய ஞான உலாவில் திருக்கைலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் உலா சிறப்பை பாடும் இலக்கியமாக அமைகின்றது. அதாவது தெய்வீக காதல் இலக்கியமாக இது அமைகின்றது. இவ்விலக்கியத்தில் உலா பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்கள் திறம்பட வெளிப்படுகின்றன. முதன்முதலாக எழுந்த இந்த உலா இலக்கியம் சிவனது பெருமைகளையும், சிறப்புக்களையும் உலா வடிவில் கூறுகின்றது. சேரமான்பெருமானால் திருக்கைலையிலே சிவபிரான் திருமுன்னே அரங்கேற்றம் செய்யப்பட்ட இவ்விலக்கியத்தின் வாயிலாக உலா இலக்கியத்திற்குரிய பண்புகளை அவதானிக்கக் கூடியதாக இருப்பதோடு, இவ்விலக்கியம் உலா பிரபந்தத்திற்குரிய இலக்கணத்தோடும் அமையப்பெற்றுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

01. கந்தசாமி,ந.,2007,பன்னிரு திருமுறைகள்,மெய்யப்பன் பதிப்பகம் 53-புதுத்தெரு சிதம்பரம்.

02. நடராசன்,பி.ரா.,2005,பதினொராம் திருமுறை-மூலமும் உரையும்,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்-இலங்கை.
03. நாராயணவேலுப்பிள்ளை,எம்.,1995,பதினொராந் திருமுறை-1, தமிழ் நிலையம் ஏ.ஆர்.ஆர் காம்ப்ளக்ஸ்,141-உஸ்மான்சாலை தி.நகர் சென்னை.

04. நாராயணவேலுப்பிள்ளை,எம்.,1995,பதினொராந் திருமுறை-2, தமிழ் நிலையம் ஏ.ஆர்.ஆர் காம்ப்ளக்ஸ்,141-உஸ்மான்சாலை தி.நகர் சென்னை.
05. www.விக்கிப்பீடியா.com